[1970 மார்ச் 13

ஆர். பாலக்குறிச்சிப் பகுதிக்குப் பாசன வசதிகள்

*359 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருமயம் தொகுதியிலுள்ள ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் அமைந்துள்ள பேயன் ஊற்றையும், சக்கம்மா கேணியையும் சீர்படுத்தி பெருமளவில் வேளாண்மைக்குப் பயன்படுத்தச் செய்யும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) இன்றெனில், உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) திருமயம் வட்டம், ஆர். பாலக்குறிச்சிப் பகுதியில் மண் குரம்புக்குப் பதிலாக பேயனூத்துவாரிக்குக் குறுக்கே அணைக்கட்டு கட்டும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. சக்கமா கேணியைச் சிரமைப்பது தேவையில்லை எனத் தெரிவதால், அக் கேணியை மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேயன் ஊற்றுத் திட்டம் எப்பொழுது தொடங்கி நிறைவுறும் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் குறித்தும், உணவு உற்பத்தி மதிப்புக் குறித்தும், மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவுக்காக நிர்வாகப் பொறியாளர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுதியிருக்கிறார். மாவட்ட ஆட்சித் தலைவரின் இசைவைப் பெற்ற பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலங்களுக்கிடையே பேருந்துப் பணி

*360 வினா.—திரு. டி. மார்டின் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையையும் திருவனந்தபுரத்தையும் இணைக்கும் வகையில் மாநிலங்களுக் கிடையே வசதியான பேருந்துப் பணி ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதுகுறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் ஸ்பீக்கர் ஸார், தற்சமயம் சென்னைக்கும் திருவனந்தபுரத்திற்கும் போக வேண்டிய பிரயாணிகள் ரயிலில் மிகவும் கஷ்டப்பட்டு நின்று கொண்டு பிரயாணம் செய்ய